அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 11/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
31. மார்ச்சு, 1988.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

மருத்துவப் பரிசோதனை–தாபனக்கோவையின்
XXVI –ஆம் அத்தியாயம்

தாபனக் கோவையின் XXVI –ஆம் அத்தியாயத்தின் 4.2ஆம் உபபிரிவை நீக்கிவிட்டு பின்வருவதை அதனிடத்தில் பதிலீடு செய்க.

"4.2 கொழும்பு. கண்டி, பேராதனை, காலி அல்லது யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் பற்றிய வகையில் இந்த நோக்கத்துக்காக ஜி 142– என்னும் படிவத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரமொன்றை மேற்குறித்த மாவட்டங்களுக்குரிய பெரியாஸ்பத்திரி (போதனா) பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏனைய சகல சந்தர்ப்பங்களிலும் இந்த விண்ணப்பப் பத்திரமானது சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்குரிய பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

பெரியாஸ்பத்திரி பணிப்பாளர் (போதனா)/பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ பரிசோதனைச் சபையொன்றினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்.

சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் வைத்திய பரிசோதனைச் சபை இயங்காவிட்டால் உரிய உத்தியோகத்தரை வைத்திய பரிசோதனைச் சபையொன்றினை ஏற்படுத்தக் கூடிய அயலிலுள்ள அல்லது நெருங்கிய பிரதேசசுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் அனுப்புதல் வேண்டும். மருத்துவச் சான்றிதழ் ஒன்றினை வழங்கும் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் அதே நோயாளியைப் பரிசோதிக்கும் சபையில் ஓர் அங்கத்தவராகப் பணியாற்றுதல் தகாது.

ஒப்பம்: டி. பி. ஐ. பீ. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.